මාතිරි (இலக்கம் 02)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා - 492

ආයතනයේ නම - රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍ය වරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர் - பகிரங்க சேவை ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களையும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No - 492**

**Name of the institution - Public Service Commission**

Submission of observations of the Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

மாதிரி (இலக்கம் 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர் - பகிரங்க சேவை ஆணைக்குழு

| குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | சீர் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை |
|---|---|
| முதலாவது பகுதி : 99.00 | |
| அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை | இந்த அலுவலகத்தில் காணப்படும் 16 வாகனங்களுள் 7 வாகனங்கள் உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் இரண்டு வாகனங்களை ஒதுக்குவதன் பொருட்டு மாற்று வாகனங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. (KO 6157, KT 4591) அதன் காரணமாகக் குறித்த வாகனங்களுக்கு தேசிய சின்னம் வரையப்படவில்லை. (பொ.நி.சுற்றறிக்கை 26/92 இற்கு அமைய)<br>மேலும், இந்த அலுவலகத்திற்கு நிதி அமைச்சினால் கைமாற்றப்படாத NC 5817 மற்றும் அகற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த PA 8180 எனும் இரண்டு வான்களுக்கு தேசிய சின்னம் வரையப்படவில்லை என்பதுடன், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் மூலம் தேசிய சின்னம் வரையும் பணியை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| இரண்டாவது பகுதி : 87.00 | |
| நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று<br>தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில், பணிக்குழுவினரின் 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்குக் குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை. ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் | எமது நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (psc.gov.lk) பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்கான வசதி தற்போது இல்லை. எனினும் எமது நிறுவனத்தின் மற்றும் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களினதும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் இணையத்தளத்தில் "தொடர்புகளுக்கு" எனும் தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த முகவரிகளுக்குப் பொதுமக்கள் தமது சிக்கல்களை அனுப்பி வைப்பதுடன், தொடர்ச்சியாகத் தொலைபேசி அழைப்புக்களும் கிடைக்கப்பெறுகின்றன.<br><br>பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட கடிதங்கள் தொடர்பிலான அறிக்கைகள் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் "சமீபத்திய தீர்மானங்கள்" எனும் |

| | |
|---|---|
| உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.<br>திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | பகுதியில் நாளாந்தம் பிரசுரிக்கப்படுகின்றன. தற்போது பொதுமக்கள் இந்த வசதியைப் பெரிதும் பாராட்டி பயன்படுத்தி வருகின்றனர். ஏற்புடைய அமைச்சின் மூலம் குறித்த தீர்மானங்களை ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கையில் நிகழும் தாமதத்தினால் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் இதன் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளன.<br>மேலும், 2023/24 காலப்பகுதியில் எமது இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கும் எந்தவொரு நபரும் "Status Tracking" சாளரம் மூலம் தனது கடிதத்திற்கு அமைவாக ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.<br>எவ்வாறாயினும் எமது இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்காகப் பிறிதொரு இணையப் பக்கமொன்றை உள்ளடக்குவதற்குத் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஆவண முகாமைத்துவ தரவுத்தள முறைமையையும் இணையத்தளத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br><br>2/2018 இற்கு அமைய மனிதவள மேம்பாட்டுத் திட்டமொன்று வகுக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டில் வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 மற்றும் அதற்கு ஏற்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அரச செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகின்றது என்பதைத் தயவுடன் அறியத் தருகிறேன். |

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு

W.H.M.M.C.K. Dayaratne
Secretary
Public Service Commission
No. 1200/9, Rajamalwatta Road
Battaramulla

பிரதிகள் -

01. பிரதமரின் செயலாளர்
02. சபை முதல்வர், இலங்கை பாராளுமன்றம்

} உரிய நடவடிக்கைகளுக்காக மற்றும் தயவுடன் தகவலுக்காக